# அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம்

**தென்காசி நவ.01 :**
இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல் படியும், தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் அரசு செயலர் (பொதுத் தேர்தல்), சென்னை அறிவுரையின்படியும் தென்காசி மாவட்டத்தில் 01.01.2026ம் தேதியினை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 222 - தென்காசி சட்டமன்றத்தொகுதியில் உள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள், வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் 29.10.2025 அன்று பிற்பகல் 4.30 மணியளவில் வாக்காளர் பதிவு அலுவலர், 222- தென்காசி சட்டமன்ற தொகுதி மற்றும் தென்காசி சார் ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள சிறப்பு தீவிர திருத்தத்திற்கான வழிமுறைகள் குறித்து சார் ஆட்சியர் அவர்களால் அரசியல் கட்சி பிரதிநிதிகளிடம் முழுமையாக விளக்கப்பட்டது.

இதன்படி 04.11.2025 முதல் 4.12.2025 வரை ஒரு மாத காலம் கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் மற்றும் 09.12.2025 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்இதன்படி 04.11.2025 முதல் 04.12.2025 வரை ஒரு மாத காலம் வீடு வீடாகச் சென்று சரிபார்ப்பு பணி வாக்குச் சாவடி நிலை அலுவலர் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளது. இந்த சரிபார்ப்பு பணியின் போது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் 1 வீடு வீடாகச் சென்று சரிபார்ப்பு பணி நவம்பர் 4 முதல் டிசம்பர் 4 2025 வரை 2 வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு டிசம்பர் 9, 2025 3 உரிமை கோரல்கள் மற்றும் மறுப்புரைகள் பெறும் காலம் டிசம்பர் 9, 2025 முதல் ஜனவரி 8, 2026 வரை 4 பெறப்பட்ட மறுப்புரைகள் தொடர்பான விசாரணை மற்றும் சரிபார்ப்பு பணி டிசம்பர் 9, 2025 முதல் ஜனவரி 31, 2026 வரை 5 இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு பிப்ரவரி 7, 2026 இந்தப் பணிகளை மேற்கொள்ளும்போது எந்த ஒரு வாக்காளரையும் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதிலிருந்து விடுதல் கூடாது மற்றும் தகுதியற்ற நபர்களை வாக்காளராக சேர்க்கக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

04.11.2025 - 04.12.2025 வரை கணக்கெடுப்பின் போது வாக்காளர்களிடம் இரண்டு படிவங்கள் வழங்கப்பட்டு ஒன்றை வாக்காளர் வைத்துக் கொண்டு மற்றொன்றில் வாக்காளரின் சுயச்சான்றிட்டு வாக்குச் சாவடி நிலை அலுவலரிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும். வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் குடியிருப்பு இல்லாத வாக்காளர்கள், வீடு பூட்டியிருக்கும் பட்சத்தில் கணக்கீட்டு படிவத்தினை அந்த வீட்டில் வைத்து விட்டு வருவர். வெளியூர் மற்றம் வெளியிடங்களுக்குச் சென்ற வாக்காளர்கள் வீட்டிற்கு குறைந்தபட்சம் 3 முறை செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி கூட்டத்தில் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் தேர்தல் துணை வட்டாட்சியர்கள். கலந்து கொண்டனர். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரில் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் .ராமராஜ் என்பவரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் முகிலன் மற்றும் அகமது ஷா என்பவரும், பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் லெட்சுமணப்பெருமாள், சங்கர சுப்பிரமணியன், நாராயணன்ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஈஸ்வரன் என்பவரும், நாம் தமிழர் கட்சியின் சார்பில் அழகு பாண்டியன், ரவிப்பாண்டியன் என்பவரும், பகுஜன் ஜமாஜ் கட்சியின் சார்பில் ராஜ்குமார் என்பவரும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் செல்வம், வெற்றிச் செல்வி ஆகியோரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கிட்டப்பா என்பவரும், மார்க்ஸிஸ்ட் கம்யுனிஸ்ட் கட்சி சார்பில் அசோக்ராஜ், மாரியப்பன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



**தென்காசி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்க வருகை தந்த திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலினை, ஆலங்குளம் மத்திய ஒன்றிய திமுக பொறுப்பாளரும் ஒன்றிய கவுன்சிலருமான வீராணம் ஷேக் முகம்மது வரவேற்று வாழ்த்து பெற்றார்.**

தென்காசி மாவட்டத்தில்

# தாட்கோ மூலம் அழகுக் கலை பயிற்சி வழங்கப்பட உள்ளது : கலெக்டர் தகவல்

**தென்காசி நவ.01:**
தென்காசி மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) தலைசிறந்த தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஒப்பனை,அழகுக்கலை மற்றும் பச்சைகுத்துதல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தகவல்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) சார்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன்அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக தற்போது தாட்கோ, தலை சிறந்த தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு, ஒப்பனை,அழகுக்கலை மற்றும் பச்சைகுத்துதல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியினை பெற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். இப்பயிற்சிக்கு எட்டாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்புவரை படித்தவராக இருக்க வேண்டும். மற்றும் 18 முதல் 35 வயதிற்குள்ளும், குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.3.00 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். இப்பயிற்சிக்கான காலஅளவு 90 நாட்கள் மேலும் திருச்சி மாவட்டத்தில் தங்கி படிப்பதற்கான செலவினத் தொகை தாட்கோவால் வழங்கப்படும்.

இப்பயிற்சி முடித்தவுடன் தகுதியான நபர்களை பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலமாக தேர்வு செய்து அந்நிறுவனத்திலேயே சார்பாக ஆரம்ப கால மாத ஊதியமாக ரூ.15,000/- முதல் ரூ.25,000/- வரை வருவாய் ஈட்ட வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும். இப்பயிற்சியில் சேருவதற்கு தாட்கோ இணையதளம் (www.tahdco.com) என்ற முகவரியில் பதிவு செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடியில் புத்தாக்க நிறுவனங்கள் தொழில் துவங்க மானியம்: கலெக்டர் தகவல்

**திருச்செந்தூர் நவ 1**
தூத்துக்குடி மாவட்டத்தில் புத்தாக்க நிறுவனங்கள் தொழில் தொடங்க மானிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்று மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் அறிவித்து உள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் “வேளாண்மை மற்றும் அதை சார்ந்த துறைகளான தோட்டக்கலை, வேளாண் பொறியியல், கால்நடைத்துறை போன்றவற்றில் புத்தாக்க நிறுவனங்களுக்கு தொழில் தொடங்க முன்வருவோருக்கு மானியம் அளிப்பதாக வேளாண் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு இருந்தது. இதில் பயன்பெற விரும்புவோர் புத்தாக்க நிறுவனம் டான்சிம் மற்றும் ஸ்டார்ட் அப் இந்தியாவில் பதிவு செய்திருக்க வேண்டும்.கடந்த 3 வருடத்தில் சராசரி லாபமானது ரூ.5 லட்சத்தை விட குறைவாக இருக்க வேண்டும். அரசிடமிருந்தோ அல்லது அரசு சார் பிற நிறுவனங்களிடமிருந்தோ எந்த கடனும் வைத்திருத்தல் கூடாது. விண்ணப்பதாரர் இந்திய நாட்டை சேர்ந்த புத்தாக்க நிறுவனமாக இருத்தல் வேண்டும். இதில் உடனடியாக உண்ணக்கூடிய பொருட்களை தயார் செய்யும் புத்தாக்க நிறுவனங்கள் பயன்பெற தகுதியானவை அல்ல.புதிதாக தொடங்கப்பட்டுள்ள புத்தாக்க நிறுவனங்களுக்கு ஒரு பிரிவுக்கு ரூ.10 லட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது. ஏற்கனவே தொடங்கப்பட்ட தொழிலை விரிவுபடுத்தி சந்தைப்படுத்த தேர்வு செய்யப்படும் புத்தாக்க நிறுவனத்துக்கு ஒரு பிரிவுக்கு ரூ.25 லட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது.எனவே, இதில் பயன்பெற விரும்புவோர் www.agrimark.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, அதனை பூர்த்தி செய்து தூத்துக்குடி புதிய பஸ் நிலையம் அருகில் உள்ள வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன் பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்து உள்ளார்.

# இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப்பள்ளி தேசிய அறிவியல் கருத்தரங்கம் போட்டி: இந்திய அளவில் இரண்டாமிடம் பெற்று சாதனை




**குற்றாலம் நவ.01:**
இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப்பள்ளி தேசிய அறிவியல் கருத்தரங்கம் போட்டியில் இந்திய அளவில் இரண்டாமிடம் பெற்று மகத்தான சாதனை. பெங்களூர் விஸ்வேஷ்வரய்யா தொழில்நுட்பம் மற்றும் அருங்காட்சியகம் பள்ளி மாணவர்களுக்கு தேசிய அறிவியல் கருத்தரங்கம் போட்டியை பெங்களூர் விஸ்வேஷ்வரய்யா அருங்காட்சியகத்தில் நடத்தியது.

போட்டியில் கவனிப்பாளராக ஜவஹர்லால் நேரு அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் தலைவர் பேராசிரியர் உமேஷ் வாக்மரே,இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூத்த பேராசிரியர் முனைவர் ஊர்வசி சின்ஹா , தேசிய அறிவியல் அருங்காட்சியகத்தின் துணை இயக்குநர் ஸ்ரீ அனுராக் குமார், தேசிய அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் காப்பாளர் ஸ்ரீ சஜு பாஸ்கரன் ஆகியோர் பங்கேற்றனர். போட்டிக்கு இந்தியாவின் அனைத்து மாநில பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் தமிழகம் சார்பில் தென்காசி மாவட்டம் இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி மாணவி சஞ்சுஸ்ரீ லட்சுமி பங்கேற்று குவாண்டம் யுகம் தொடங்குகிறது- சாத்தியக் கூறுகள் மற்றும் சவால்கள் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்தி இந்திய அளவில் இரண்டாம் இடம் பெற்று மகத்தான சாதனை படைத்தார்.

இந்திய அளவில் சாதனை படைத்த மாணவி சஞ்சுஸ்ரீ லட்சுமிக்கு ஜவஹர்லால் நேரு அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் தலைவர் பேராசிரியர் உமேஷ் வாக்மரே, ராமன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூத்த பேராசிரியர் முனைவர் ஊர்வசி சின்ஹா , தேசிய அறிவியல் அருங்காட்சியகத்தின் துணை இயக்குநர் ஸ்ரீ அனுராக் குமார், தேசிய அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் காப்பாளர் ஸ்ரீ சஜு பாஸ்கரன் ஆகியோர் சான்றிதழ் மற்றும் ருபாய் 24,000/ க்கு காசோலை வழங்கிப் பாராட்டினர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தேசிய அறிவியல் கருத்தரங்கம் போட்டியில் இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி மாணவி ரச்னா இந்திய அளவில் முதலிடம் பெற்று சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது. மீண்டும்

தேசிய அறிவியல் கருத்தரங்கம் போட்டியில் தமிழகம் சார்பில் இந்திய அளவில் சாதனை படைத்த சஞ்சுஸ்ரீ லட்சுமியை பாரத் கல்விக் குழுமத் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் முனைவர் காந்திமதி மோகன கிருஷ்ணன்,ஆரம்பப் பள்ளி முதல்வர் வனிதா, மேல்நிலைப் பள்ளி முதல்வர் கிஃப்ட் சன் கிருபாகரன், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பாராட்டினர்.

# சங்கரன்கோவில் அரசு கலைக் கல்லூரியில் ரூ. 7.56 கோடி மதிப்பீட்டில் சமூக நீதி மாணவியர் விடுதி அடிக்கல் நாட்டு விழா

## எம்எல்ஏ ராஜா, எம்.பி.ராணி ஸ்ரீகுமார் பங்கேற்பு



**சங்கரன்கோவில். நவ.1.**
தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்நாடு ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலம் தமிழ்நாடு ஆதிதிராவிட வீட்டு வசதி மேம்பாட்டு கழகம் (தாட்கோ). சார்பில் ரூபாய் 7. 5 6 மதிப்பீட்டில் 100 மாணவிகள் தங்கும் வகையில் சமூக நீதி மாணவியர் விடுதி கட்டும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சி நடந்தது. கல்லூரி முதல்வர் (பொறுப்பு) வேணுகோபால் தலைமை வகித்தார். நிர்வாக பொறியாளர் மீனாட்சி சுந்தரம் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ, தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சமூகநீதி மாணவியர் விடுதி கட்டும் பணியை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தனர். இதில் சங்கரன் கோவில் நகராட்சி சேர்மன் கௌசல்யா வெங்கடேஷ், நகராட்சி கவுன்சிலர் செல்வராஜ், திமுக தகவல் தொழில் நுட்ப அணி சிவசுப்பிரமணியன், மாணவரணி வெங்கடேஷ், பாலாஜி மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், கல்லூரி மாணவிகள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கோவில்பட்டி நாடார் மேல்நிலைப் பள்ளியில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு கூட்டம்



**கோவில்பட்டி நவ 01**
கோவில்பட்டி நாடார் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடந்த பிரார்த்தனை கூட்டத்தில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. பள்ளிச் செயலாளர் வழக்கறிஞர் ஜெ . ரத்தினராஜா தலைமை வைத்தார். பொருளாளர் விஜயகுமார் முன்னிலை வகித்தார். நிர்வாக குழு உறுப்பினர்கள் சாமிராஜன், வேல்முருகன், ரவிச்சந்திரன், வெங்கடேஷ், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பள்ளி தலைமை ஆசிரியர் பெ.அருணாச்சலம் அனைவரையும் வரவேற்றார். கோவில்பட்டி கோட்ட கலால் வட்டாட்சியர் செந்தில்குமார் போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு சிறப்புரை ஆற்றினார். பள்ளி முதுகலை தமிழ் ஆசிரியர் ஆறுமுக கனி போதை ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழி வாசித்தார்.மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர் பெருமக்கள் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.பள்ளி பசுமை படை ஆசிரியர் முருகேசன் நன்றி கூறினார்.



**குத்துக்கல்வலசை ஊராட்சியில் உள்ள ஆர்.சி துவக்கப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு வண்ண சீருடைகளை ஊராட்சி மன்றதலைவர் சத்யராஜ் தனதுசொந்த செலவில் வழங்கினார். இதில் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.**

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஹலோவின் விழா

**குற்றாலம் நவ.01:**
இலஞ்சி பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஹலோவின் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

விழாவில் கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் தலைமை வகித்தார். பள்ளி முதல்வர் பாலசுந்தர் மற்றும் தலைமை ஆசிரியர் செல்வலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவ்விழாவானது ஹலோவின் பாடலுடன் தொடங்கியது. விழாவை மாணவி மிருதுளா ஜனனி தொகுத்து வழங்கினார். மாணவி அஸ்கதி விழாவில் வரவேற்புரையாற்றினார். முதலாவதாக மழலையர் பிரிவில் ஹலோவின் மிருகங்கள் மாதிரி வேடமணிந்து நடனமாடினர்.

ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்கள் எலும்புக்கூடு மாதிரி வேடமிட்டு நடனமாடினர். நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவ மாணவியர்கள் மந்திரவாதிகள் போல் வேடம் அணிந்து மேஜிக் செய்தனர்.ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்கள் பேய்கள் போல் வேடம் அணிந்து நடனம் ஆடினர். பேய் வீடு ஒன்று அமைத்து அதில் ஹலோவின் புகைப்படங்கள் அலங்கரிக்கப்பட்டன.

இறுதியாக மாணவி திவ்யதர்ஷினி நன்றியுரையாற்றி விழா இனிதே நிறைவுற்றது. இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை பாரத் கல்வி குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் டாக்டர். காந்திமதி மோகனகிருஷ்ணன்,கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ்,இயக்குனர் இராதாபிரியா,பள்ளி முதல்வர் பாலசுந்தர்,தலைமை ஆசிரியர் செல்வ லிங்கம் ஆகியோர் செய்திருந்தனர்.



# பெரியார் உலக பூங்காவிற்கு நன்கொடை



**தென்காசி நவ.01:**
தென்காசி தெற்கு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தந்த திராவிடம் கழகம் தலைவர் கி.வீரமணியிடம் திருச்சியில் நிறுவப்படும் பெரியார் உலகம் பூங்காவிற்கு தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் முன்னிலையில் மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர்அன்பரசன் ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார். மேலும் தென்காசியில் புகழ்பெற்ற சாந்தி பன்;;நோக்கு மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர்களில் ஒருவரான மருத்துவர் தமிழரசன் ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையினையும் சாந்தி மருத்துவமனை மருத்துவர்களான கௌதமி, பொன்மலர் ஆகியோர் தலா ரூபாய் ஐம்பதாயிரத்திற்கான காசோலைகளையும் திராவிடர் கழகம் தலைவர் வீரமணியிடம் வழங்கினர்.



**தென்காசி மாவட்டத்தில் முதலமைச்சர் பங்கேற்ற நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்த மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலனை தலைமை செயற்குழு உறுப்பினர் ஜேசுராஜன் பாராட்டினார். உடன் வர்த்தக அணி முத்துக்குமார் உள்ளார்.**



**கோவில்பட்டியில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் 118 வது குருபூஜை விழாவை முன்னிட்டு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மக்கள் நல அறக்கட்டளை சார்பாக அதன் நிறுவனத் தலைவர் நேதாஜி பாலமுருகன் தலைமையில் பயணியர்கள் தேவர்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் அறக்கட்டளை சேர்ந்த கண்ணன், ரத்தினவேல்,மதிமுத்து,தங்கப்பாண்டி,பரமசிவபாண்டியன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.**

அரும்பாக்கம் பகுதியில்

# சிட்பண்ட் நடத்தி ரூ.2.4 கோடி மோசடி; 2 பேர் கைது

சென்னை நவ 01-

அரும்பாக்கம் பகுதியில் சிட்பண்ட் நடத்தி பொதுமக்களிடம் ரூ.2.4 கோடி மோசடி செய்த வழக்கில் நிதி நிறுவனத்தின் இயக்குநர் உட்பட 2 பேரை போலீசார் கைது செய்தனர். சென்னை கோவிலம்பாக்கம் பகுதியை சேர்ந்த டில்லிபாபு(39).

இவர் அரும்பாக்கம் பகுதியில் கடந்த 2019ம் ஆண்டு 'அச்சலிஸ் சிட்பண்ட் பிரைவேட் லிமிடெட்' என்ற பெயரில் நிதி நிறுவனம் நடத்தி வந்தார். முதலீடு செய்யும் பணத்திற்கு அதிக வட்டி தருவதாக பொதுமக்களிடையே விளம்பரம் செய்தார். அதை நம்பிய பொதுமக்கள் பலர் டில்லிபாபுவின் நிதி நிறுவனத்தில் முதலீடு செய்தனர். முதலீட்டு பணத்திற்கான முதிர்வு தொகையை கேட்ட போது, முறையாக பதில் சொல்லாமல், திடீரென நிதி நிறுவனத்தை மூடிவிட்டு நிதி நிறுவன இயக்குநர் டில்லிபாபு மற்றும் நிறுவனத்தில் பணியாற்றிய நிர்வாகிகள் தலைமறைவாகிவிட்டனர்.இதனால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் புகார் அளித்தனர். அதன்படி விசாரணை நடத்த மத்திய குற்றப்பிரிவுக்கு கமிஷனர் அருண் உத்தரவிட்டார். அதனை தொடர்ந்து, மத்திய குற்றப்பிரிவு சீட்டு மற்றும் கந்து வட்டி புலனாய்வு பிரிவு போலீசார் கடந்த மாதம் 8ம் தேதி வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

அதில், நிதி நிறுவனத்தை டில்லிபாபு மற்றும் தனது நண்பர்களான யுவராஜ், ஆனந்தன் ஆகியோர் இயக்குநர்களாக இருந்து தொடங்கியுள்ளார். மேலும் நிதி நிறுவனத்தின் கணக்கு மேலாளராக பணியாற்றிய வினோத்குமார் நியமித்து பொதுமக்களை ஏமாற்றும் நோக்கில் 70க்கும் மேற்பட்டோரிடம் ரூ.2.4 கோடி வரை பணத்தை வசூலித்து மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது.அதைதொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் தலைமறைவாக இருந்த வந்து நிதி நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரான கோவை ஆர்.எஸ்.புரத்தை சேர்ந்த ஆனந்தன்(48) மற்றும் நிதி நிறுவனத்தின் கணக்கு மேலாளராக இருந்து அரும்பாக்கத்தை சேர்ந்த வினோத்குமார்(32) ஆகியோரை மத்திய குற்றப்பரிவு போலீசார் கைது செய்தனர். மேலும் தலைமறைவாக உள்ள முக்கிய குற்றவாளி டில்லபாபு, யுவராஜ் ஆகியோரை போலீசார் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

ஆதம்பாக்கம் அடுக்குமாடி குடியிருப்பில் பயங்கர

# தீ விபத்து : டாக்டர் மனைவி உடல் கருகி பலி

சென்னை நவ 01-

ஆதம்பாக்கத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் அதிகாலை ஏற்பட்ட தீவிபத்தில் டாக்டர் மனைவி உடல் கருகி இறந்தார். குளியல் அறைக்குள் சென்று கதவை பூட்டிக்கொண்டதால் டாக்டர், அவரது மகன், மகள் ஆகியோர் உயிர் தப்பினர். ஆதம்பாக்கம், ராமகிருஷ்ணா நகர், 2வது மெயின் ரோட்டில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் முதல் தளத்தில் வசித்து வருபவர் டாக்டர் ஆனந்த பிரதாப் (64). இவர், ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவரது மனைவி சசிபாலா (58). தம்பதிக்கு பூஜா ஆனந்த் (24) என்ற மகளும், ரோகித் ஆனந்த் (23) என்ற மகனும் உள்ளனர். இதில், மகள் டாக்டராகவும், மகன் இன்ஜினியராகவும் உள்ளனர்.நேற்று முன்தினம் இரவு அனைவரும் சாப்பிட்டு முடித்துவிட்டு சிறிதுநேரம் பேசிவிட்டு பின்னர் அவர்களது அறைகளுக்கு தூங்க சென்றுள்ளனர். இந்நிலையில், நேற்று அதிகாலை வீட்டுக்குள் தீவிபத்து ஏற்பட்டு, கரும்புகை சூழ்ந்ததால் 4 பேருக்கும் மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது. இதனால் திடுக்கிட்டு எழுந்து, வேகமாக வெளியே வர முயன்றுள்ளனர். அதற்குள் மின் வயர்கள் தீப்பிடித்து எரிய ஆரம்பித்துள்ளது. இதனால், அதிர்ச்சியடைந்த டாக்டர் ஆனந்த் பிரதாப் உடனடியாக அனைவரையும் குளியலறைக்கு இழுத்துச்சென்று கதவை பூட்டிக்கொண்டு காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று கூச்சலிட்டுள்ளார்.அப்போது சசிபாலா யாரையேனும் உதவிக்கு அழைக்க, தனது செல்போனை எடுக்க குளியல் அறையில் இருந்து வெளியில் வந்துள்ளார். அப்போது அங்கு படர்ந்திருந்த தீயில் சிக்கி அலறி கூச்சலிட்டுள்ளார். தங்களது கண் முன்னே உடல் முழுவதும் தீ பரவி உடல்வெந்து கதறிய நிலையில் அவரை காப்பாற்ற முடியாமல் குடும்பத்தினர் கதறியுள்ளனர். இதனிடையே டாக்டர் வீட்டில் இருந்து புகை வெளியேறுவதை பார்த்து அக்கம்பக்கத்து வீட்டினர் திரண்டு வந்து, ஆதம்பாக்கம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் போலீசார் மற்றும் வேளச்சேரி, அசோக் நகர் ஆகிய பகுதிகளில் இருந்து தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று கதவை திறக்க முயன்றனர். ஆனால், உள்பக்கமாக தாழிட்டு இருந்தது.பின்னர் ஏணி மூலம் ஏறிச்சென்று குளியல் அறையின் ஜன்னலை உடைத்து உள்ளே சென்ற வீரர்கள், அங்கு மயங்கி கிடந்த டாக்டர், அவரது மகன், மகள் ஆகியோரை மீட்டு வெளியே கொண்டு வந்து உடனடியாக சிகிச்சைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதனிடையே, தீயை முழுவதுமாக அணைத்து பக்கவாட்டு ஜன்னலை உடைத்து இறந்து கிடந்த சசிபாலா உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைத்தனர்.இந்த தீ விபத்து குறித்து ஆதம்பாக்கம் போலீசார் வழக்குபதிவு செய்து விசாரித்தனர். அதில், மின் கசிவு காரணமாக வீட்டில் உள்ள மின் வயர்கள் தீப்பிடித்து எரிந்ததும், இதன் காரணமாக குளிர்சாதன பெட்டி மற்றும் ஏசியில் இருந்த காஸ் சிலிண்டர் வெடித்து வீடுமுழுவதும் தீப்பிடித்து, புகைமூட்டமாக மாறியதும் தெரியவந்தது.இது தொடர்பாக தொடர்ந்து விசாரித்து வருகின்றனர். இந்சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது. தீவிபத்தில் பலியான சசிபாலா கும்மிடிப்பூண்டி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், திமுக நிர்வாகியுமான சி.எச்.சேகரின் சகோதரி என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜமங்கலம் பகுதியில்

# டீக்கடை ஊழியரை தாக்கி செல்போன் மற்றும் பணம் பறித்த வாலிபர் கைது

சென்னை நவ 01-

சென்னை, கொளத்தூர், தேவி நகர் 2வது தெருவில் வசித்து வரும் ஜென்சிரத்தினம், என்பவர் கொளத்தூர் 200 அடி ரோட்டில் டீக்கடை நடத்தி வருகிறார்.

இவர் கடந்த 27.ந் தேதி அன்று இரவு டீக்கடையில் வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது அங்கு வந்த கிஷோர் உட்பட 3 பேர் மேற்படி ஜென்சிரத்தினத்தை அவதூறாக பேசி பணம் கேட்டு மிரட்டியுள்ளனர்.

ஜென்சிரத்தினம் பணம் தர மறுத்ததால், கடையில் வேலை செய்த தினேஷ் என்பவரை தாக்கி அவரிடமிருந்து செல்போன் மற்றும் கடைக்கு தேவையான பொருட்கள் வாங்க வைத்திருந்த பணம் ரூ.2,750/-ஐ பறித்துக்கொண்டும், கடையிலிருந்த பாட்டில்களை உடைத்து சேதப்படுத்திவிட்டும் அங்கிருந்து தப்பிச்சென்றனர்.

இது குறித்து ஜென்சிரத்தினம் ராஜமங்கலம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ராஜமங்கலம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி கிஷோர், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 செல்போன் மீட்கப்பட்டு ஒரு கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி கிஷோர் ராஜமங்கலம் காவல் நிலைய சரித்திரப்பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே திருட்டு, வழிப்பறி உட்பட 8 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரிய வந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி கிஷோர் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். மேற்படி வழக்கில் தொடர்புடைய மற்ற எதிரிகளை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

மழைநீர்
உயிர்நீர்

# பெண்ணுக்கு கத்திக்குத்து: 4 பேர் கைது

சென்னை நவ 01-

சென்னை, எம்.கே.பி. நகரில் லட்சுமி, என்பவர் தனது மூத்த மகள் மற்றும் இளைய மகளின் மகனுடன் வசித்து வருகிறார்.

இளைய மகள் துபாயில் வேலை செய்து வரும் நிலையில், லட்சுமி கடந்த 17 நே தேதி அன்று வீட்டிலிருந்த போது, இளைய மகளின் நண்பரான சரத் என்பவர் லட்சுமியிடம் தகராறு செய்து தாக்கி வீட்டிலிருந்த நபர்கள் மற்றும் அவரது பேரனையும் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தது தொடர்பாக லட்சுமி எம்.கே.பி. நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். இந்நிலையில் கடந்த 29 நே தேதி அன்று லட்சுமி அவரது வீட்டிற்குள் சென்றபோது, அங்கு வந்த சரத் மற்றும் 3 பேர் லட்சுமியை தகாத வார்த்தைகளால் பேசி, அதில் ஒருவர் கத்தியை எடுத்து லட்சுமியை தாக்கியபோது, லட்சுமி நகர்ந்து கொள்ளவே தப்பித்து, வீட்டிற்குள் சென்று கதவை தாழிட்டுக் கொண்டார். மேலும் 4 பேரும் கதவை தட்டி திறக்க சொல்லி பின்னர் கொலை மிரட்டல் விடுத்து சென்றதாக லட்சுமி எம்.கே.பி. நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில், போலீசார் கொலை முயற்சி, ஆயுதம் வைத்திருத்தல் உள்ளிட்ட சட்டப்பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். எம்.கே.பி. நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.சரத், 2.ராஜ்குமார் (எ) ராஜ், 3.விக்னேஷ், (எ) விக்கி, 4.ராம்குமார் (எ) ராம், ஆகிய 4 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 2 கத்திகள் மற்றும் 500 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. எதிரிகள் கஞ்சா வைத்திருந்ததின்பேரில், இவ்வழக்கில் கூடுதலாக போதைப் பொருள் சட்ட பிரிவும் சேர்க்கப்பட்டது.விசாரணையில் எதிரிகள் சரத் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் சரித்திர பதிவேடு குற்றவாளிகள் என்பதும், இதில் எதிரிகள் சரத் மீது 4 கொலை முயற்சி, வழிப்பறி உட்பட 18 குற்ற வழக்குகளும், ராஜ்குமார் மீது 1 கொலை மற்றும் கொலை முயற்சி உட்பட 10 குற்ற வழக்குகளும், விக்னேஷ் மீது 13 குற்ற வழக்குகளும், ராம்குமார் மீது 2 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட நால்வரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

கோயம்பேட்டில்

# பொதுமக்கள் அடகு வைத்த 2 கிலோ நகைகளை விற்ற வாலிபர் கைது

சென்னை நவ 01-

கோயம்பேட்டில் பொது மக்கள் அடகு வைத்த 2 கிலோ நகைகளை விற்று நண்பர்களுடன் மது அருந்தி ஜாலியாக இருந்த வாலிபர் கைது செய்யப்பட்டார். ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்தவர் கெகன்ராம் (55). இவர் சென்னை கோயம்பேடு சரஸ்வதி நகர் பகுதியில் அடகு கடை நடத்தி வந்தார். அதே பகுதியில் வாடகை வீட்டில் குடும்பத்துடன் கடந்த 30 வருடங்களாக வசித்து வந்தார். அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள், தங்களது பணத்தேவைக்காக கெகன் ராமிடம் அடகு வைத்து பணம் பெறுவதும், பின்னர் வட்டியுடன் பணத்தை செலுத்தி விட்டு நகையை மீட்டு செல்வதுமாக இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த ஒன்றரை வருடத்திற்கு முன், கெகன்ராம் உடல் நிலை சரியில்லாமல் இறந்து விட்டார். அதனால் அவரது மகன் சுனில் (25), அடகு கடையை நடத்தி வந்தார்.இந்நிலையில் கடந்த 8ம் தேதி அடகு கடை பூட்டப்பட்டிருந்தது. பொதுமக்கள், கடைக்கு வந்து பார்த்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர். வெகு நாட்களாக கடை மூடப்பட்டதால் அவரது செல்போனை தொடர்பு கொண்டால் சுவிட்ச் ஆப் என வந்தது. இதனால் நகைகளை அடகு வைத்தவர்கள், சந்தேகத்துடன், வீட்டின் உரிமையாளரிடம் விசாரித்தனர்.

அப்போதுதான், குடும்பத்துடன் இரவோடு இரவாக சுனில், ராஜஸ்தானுக்கு தப்பி சென்றது தெரியவந்தது. இதனால் கடும் அதிர்ச்சியடைந்தனர். உடனே கோயம்பேடு போலீசில் புகார் செய்தனர். போலீசார் வழக்கு பதிவு செய்து சுனிலின் செல்போனை தொடர்பு கொண்டனர். அப்போதும் சுவிட்ச் ஆப் என வந்தது. எப்படியும் செல்போனை ஆன் செய்வார் என்பதால் போலீசார் தொடர்ந்து கண்காணித்து வந்தனர். மேலும் சுனில், மீண்டும் சென்னைக்கு வந்தால் தகவல் கொடுக்கும்படியும் தெரிவித்திருந்தனர். அதன்படியே வளசரவாக்கத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு நேற்று சுனில் வருவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. உடனே இன்ஸ்பெக்டர் ஜானகிராமன் தலைமையிலான போலீசார் வளசரவாக்கம் பகுதியில் மாறுவேடத்தில் கண்காணித்தனர். அப்போது, சுனில், அவரது உறவினர் வீட்டுக்கு வந்தபோது, மறைந்திருந்த போலீசார் சுற்றி வளைத்து கைது செய்தனர். பின்னர் அவரை காவல் நிலையத்துக்கு அழைத்து வந்து விசாரித்தனர். இதையடுத்து அடகு வைத்திருந்த பொதுமக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கோயம்பேடு போலீஸ் நிலையத்தில் குவிந்தனர். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பொதுமக்களை போலீசார் சமாதானப்படுத்தியதோடு, 'இப்போதுதான் கைது செய்திருக்கிறோம். நகைகளை எங்கு வைத்துள்ளார் என விசாரித்து உங்களது நகைகளை கிடைக்க ஏற்பாடு செய்கிறோம். நகைகளை அடகு வைத்தவர்கள் புகார் செய்வதாக இருந்தால் செய்யலாம்' என்றனர். இதையடுத்து 100க்கும் மேற்பட்டவர்கள் போலீசில் புகார் அளித்தனர்.இதையடுத்து சுனிலிடம் போலீசார் விசாரணை நடத்தினர். அவர் அளித்த பரபரப்பு வாக்குமூலம் வருமாறு: எனது சொந்த ஊர் ராஜஸ்தான். 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சென்னையில் குடும்பத்துடன் வசித்து வந்தேன். கடந்த ஒன்றரை வருடத்திற்கு முன் திடீரென எனது அப்பா இறந்துவிட்டதால் அடகு கடையை நடத்தும்படி எனது தாயார் கூறினார். வேறு வழி இல்லாமல் நானும் கவனித்து வந்தேன். அப்போதுதான், இப்பகுதியில் வசிக்கும் மக்கள் பலர், நகைகளை அடமானம் வைத்தனர். ஏராளமான நகைகள் சேர்ந்ததால் அவற்றை வேறு கடையில் அடமானம் வைத்து அந்த பணத்தில் நண்பர்களுடன் மது அருந்தி ஜாலியாக இருந்தேன்.பின்னர் தினமும் சொகுசாக இருப்பதற்கு அடகு வைத்த நகைகளை விற்க ஆரம்பித்தேன். அந்த பணத்தில் தினமும் நண்பர்களுடன் மது அருந்தி ஜாலியாக ஊர் சுற்றி வந்தேன். இந்த நிலையில்தான் அடகு வைத்த பலர், வட்டி மற்றும் அசலுடன் நகையை திரும்ப பெற வந்தனர். இதனால் எனக்கு பயம் ஏற்பட்டது. அடகு நகைகளை விற்று விட்டோம், எப்படி கொடுப்பது என்ற தூங்காமல் தவித்தேன். அதனால் வேறு வழியில்லாமல் இரவோடு இரவாக வீட்டை காலி செய்து விட்டு ராஜஸ்தானுக்கு சென்று விட்டேன். போலீசார் என்னை தேடுகிறார்களா? எனவும், பொதுமக்களின் மனநிலை எப்படி இருக்கிறது என்பதையும் அறிய சென்னை வந்தபோது வசமாக சிக்கி கொண்டேன்.

இவ்வாறு அவர் கூறினார். போலீசார் வழக்கு பதிந்து சுனிலை கைது செய்து இன்று காலை புழல் சிறையில் அடைத்தனர். போலீசார் கூறுகையில், 'பொதுமக்கள் அடகு வைத்த சுமார் ஒன்றரை கோடி ரூபாய் மதிப்பிலான 2 கிலோ தங்க நகைகளை ஒன்றரை வருடத்தில் விற்பனை செய்துள்ளார். அந்த பணத்தை நண்பர்களுடன் சேர்ந்து ஜாலியாக மது அருந்தியும் சொகுசாகவும் இருந்து செலவு செய்துள்ளார். போலீஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய உள்ளோம். அதற்கு பிறகு காவலில் எடுத்து விசாரித்து நகைகளை எங்கு பதுக்கி வைத்துள்ளார், எங்கு விற்பனை செய்துள்ளார் என விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களிடம் நகைகள் ஒப்படைக்கப்படும்' என்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வளசரவாக்கம் பகுதியில்

# நகைக்கடையில் நூதன முறையில் தங்கச்சங்கிலிகளை திருடிய 2 பேர் கைது

சென்னை நவ 01-

சென்னை, முகலிவாக்கத்தைச் சேர்ந்த மாதவராமு, என்பவர் சென்னை, ஆற்காடு சாலையில் உள்ள தங்க நகைக் கடையில் கிளை மேலாளராக வேலை செய்து வருவதாகவும், கடந்த 24 ந் தேதி அன்று காலை கடையில் இருந்த தங்க நகைகளை சரி பார்த்த போது, அதில் தங்கச்சங்கிலிகள் அடங்கிய ஒரு பெட்டியில் 2 கவரிங் தங்கச்சங்கிலிகளில் போலியான விற்பனை அட்டையுடன் (Tag) கலந்து இருந்ததாகவும், யாரோ வாடிக்கையாளர் கடைக்கு வந்து தங்கச்சங்கலிகள் வாங்குவது போல நகைளை பார்த்துக் கொண்டிருந்தபோது, விற்பனையாளர் அசந்த நேரத்தில் தான் கொண்டு வந்த 2 கவரிங் தங்கச்சங்கிலிகளை வைத்துவிட்டு, 2 அசல் தங்கச்சங்கிலிகளை திருடிச் சென்றது சிசிடிவி மூலம் தெரியவந்ததாகவும், மேற்படி நபரை கண்டுபிடித்து தங்கச்சங்கிலிகளை மீட்டு தரும்படியும், கிளை மேலாளர் மாதவராமு என்பவர் வளசரவாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். வளசரவாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்தும், அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து, தீவிர விசாரணை மேற்கொண்டும், மேற்படி நூதன திருட்டில் ஈடுபட்ட எதிரிகள் 1.கௌதம், 2.லோகேஷ், ஆகிய 2 பேரை கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து மேற்படி நகைக்கடையில் திருடிய 149.5 கிராம் எடை கொண்ட 2 தங்கச்சங்கிலிகள் மீட்கப்பட்டது.

விசாரணையில் மேற்படி தங்க நகைக்கடையில் வேலை செய்து வரும் எதிரி லோகேஷ் என்பவர் கொடுத்த திட்டத்தின்படி அவரது நண்பரான எதிரி கௌதம் என்பவர் வாடகை வாகன செயலி மூலம் ஆட்டோவில் மேற்படி தங்க நகைக்கடைக்கு வந்து, தங்கச்சங்கிலிகளை வாங்குவது போல டிரேவில் இருந்த தங்கச்சங்கிலிகளை பார்த்துக் கொண்டு, விற்பனையாளர் அசந்த நேரத்தில் தான் ஏற்கனவே கொண்டு வந்த 2 கவரிங் தங்கச்சங்கிலிகளை டிரேவில் வைத்து விட்டு, 2 அசல் தங்கச்சங்கிலிகளை திருடிச் சென்றது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# கடல் அலையில் சிக்கி 4 பெண்கள் உயிரிழப்பு

சென்னை நவ 01-

எண்ணூர் பெரியகுப்பம் கடல் பகுதியில் 4 பெண்களின் சடலம் கரை ஒதுங்கிய சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. உயிரிழந்த 4 பெண்களும் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியை சேர்ந்தவர்கள். பவானி(19), தேவகி, செல்வம் மற்றும் கல்லூரி மாணவி சாந்தினி. இதில் கல்லூரி மாணவி தவிர மற்ற 3 பேரும் கும்மிடிப்பூண்டி பகுதியில் துணிக்கடையில் வேலை செய்து வந்துள்ளனர். பெரியகுப்பம் கடற்பகுதி ஆழமில்லாத பகுதி ஆகும். இடுப்பு அளவே நின்று குளிக்கும் அளவிற்கு தரைப்பகுதியாக இருந்து வருகிறது.இந்த நிலையில் போலீசாரின் முதற்கட்ட விசாரணையில், ஒரு பெண் கடலில் குளித்து கொண்டிருக்கும் பொழுது மூச்சு திணறி அலையில் சிக்கி உள்ளார். கரையில் இருந்த அடுத்தடுத்த 3 பெண்களும் அந்த பெண்ணை காப்பாற்ற சென்ற போது ஒருவருக்கொருவராக அலையில் சிக்கி உயிரிழந்ததாக கூறப்படுகிறது. அப்பகுதி அருகே உள்ள மீனவர்கள் சடலத்தை பார்த்து போலீசாருக்கு உடனடியாக தகவல் தெரிவித்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த எண்ணூர் போலீசார் உடலை கைப்பற்றி பிரேதபரிசோதனைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் எப்படி உயிரிழந்தார்கள் என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தைகள் கூறி ரூ. 18 லட்சம் பணம் மோசடி- காதலன் கைது

சென்னை நவ 01-

சென்னை, அயனாவரம் பகுதியில் வசித்து வரும் 27 வயது பெண் ஒருவர் தானும், மதுரவாயலைச் சேர்ந்த பாலாஜி என்பவரும் சுமார் 10 வருடங்களாக காதலித்து வருவதாகவும், இரு வீட்டாரும் காதலுக்கு சம்மதம் கொடுத்து திருமணம் செய்ய இருந்ததாகவும், கடந்த 2023ம் ஆண்டு பாலாஜி தொழில் தொடங்க பணம் தேவைப்படுவதாக கூறியதன்பேரில், வங்கியிலிருந்து கடன் பெற்றும், திருமணத்திற்காக சேர்த்து வைத்திருந்த பணம் என பல தவணைகளாக மொத்தம் ரூபாய் 18 இலட்சம் பணத்தை பாலாஜியிடம் கொடுத்ததாகவும், பின்னர் ஒரு தங்க நகை சீட்டு போட்டு அந்த பணத்தையும் பாலாஜியிடம் கொடுத்து விட்டு மாத தவணை செலுத்தி வந்ததாகவும், பின்னர் தான் செய்து வந்த வேலையில் இருந்து நின்று விட்டதால், வங்கி கடன் செலுத்த பாலாஜியிடம் பணம் கேட்டபோது, பாலாஜி பணம் தர மறுத்து தகாத வார்த்தைகளால் பேசி, திருமணம் செய்ய மறுத்ததாகவும், மேலும் பாலாஜியின் பெற்றோரிடம் முறையிட்டதற்கு பாலாஜியின் பெற்றோர் மற்றும் அவரது தங்கையும் தகாத வார்த்தைகளால் மிரட்டி அனுப்பியதாகவும், திருமணம் செய்து கொள்வதாக கூறி பணம் பெற்று மோசடி செய்த பாலாஜி மற்றும் அவரது குடும்பத்தார் மீது நடவடிக்கை எடுக்கும்படி பாதிக்கப்பட்ட மேற்படி பெண் அயனாவரம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் மோசடி மற்றும் தமிழ்நாடு பெண் வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

அயனாவரம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மேற்கொண்டு இவ்வழக்கில் தொடர்புடைய பாலாஜி, என்பவரை ம் கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட எதிரி பாலாஜி விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# ஒஜி கஞ்சா வைத்திருந்த வாலிபர் கைது

சென்னை நவ 01-

சென்னை திருமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர், அண்ணாநகர், 2வது அவென்யூவில் கண்காணித்து அங்கு நின்றிருந்த 2 நபர்களை விசாரணை செய்ய சென்றபோது, ஒருவர் தப்பியோடவே, காவல் குழுவினர் மற்றொருவரை மடக்கிப் பிடித்து விசாரணை செய்து, அவரை சோதனை செய்த போது, அவர் ஒஜி கஞ்சா என்ற போதைப்பொருள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், திருமங்கலம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, போதைப்பொருள் வைத்திருந்த கணேஷ், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 8 கிராம் ஒஜி கஞ்சா மற்றும் 1 ஐபோன் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி கணேஷ் மீது ஏற்கனவே அண்ணா நகர் காவல் நிலையத்தில் ஒரு போதைப்பொருள் வழக்கு உள்ளது தெரிய வந்தது

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஒன்றியத்தலைப்பின் கீழ் காலியாக உள்ள இரவுக்காவலர் பணியிடங்களை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்விற்கான அழைப்பாணை.

அழைப்பாணை எண்:01/2025 நாள்:31.10.2025

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் காலியாகவுள்ள இரவுக்காவலர் பணியிடத்திற்கு விண்ணப்பித்து 23.10.2025 அன்று கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொண்ட தகுதியான நபர்கள் 04.11.2025 அன்று காலை 10.00 மணிக்கு நேர்முகத் தேர்விற்கு அசல் ஆவணங்களுடன் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நேரில் ஆஜராக இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:-

1. அசல் ஆவணங்கள் அனைத்தும் அதற்குரிய அலுவலரிடமிருந்து இவ்வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியான நாட்களுக்கு முன்னரே சான்றொப்பம் பெற்றிருக்க வேண்டும்.
2. பயணப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.
3. விண்ணப்பதாரர்கள் தங்களது சொந்த செலவில் கலந்து கொள்ள வேண்டும்.

ஆணையாளர்
கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம்

வெ.ஆ.எண்.115/2025/செ.ம.தொ.அ/தென்காசி/ நாள்:31.10.2025

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம், தென்காசி
RDOTKS/
இ.ப.வ.எண்.237/2 025-b2
காஜா முகைதீன்
த/பெ. முகம்மது இஸ்மாயில்,
23, ரகுமானியாபுரம்
3-வது தெரு, கிருஷ்ணாபுரம்,
கடையநல்லூர்
....மனுதார்
அறிவிப்பு
ஷை மனுதார் காஜா முகைதீன் என்பவர் தனது தாயார் முகைதீன் பாத்திமா கடந்த 23.03.2012 ம் தேதியன்று மேற்கண்ட முகவரியில் வைத்து இறந்ததை பதிவு செய்ய தவறிவிட்டார். மேற்படி இறப்பினை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினத்திற்குள் தென்காசி கோட்டாட்சித்தலைவர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
மனுதார்
காஜா முகைதீன்

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயம்
சிறப்பு சார்பு நீதிமன்றம்
திருநெல்வேலி
எம்.சி.ஓ.பி. எண். 763/2024
ராஜேந்திரன்
..மனுதாரர்
எதிர்
அருண்குமார்,
த/பெ. முருகேசன்,
எண்.81/3-E3, முத்து கிருஷ்ணாபுரம், 6 வது தெரு,
தூத்துக்குடி- 1
.....1ம் எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மனுதாரர் மோட்டார் வாகன விபத்தில் காயம்பட்ட வகைக்காக இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி வழக்கில் 1வது எதிர்மனுதாரராகிய தாங்கள் நீதிமன்றத்தில் ஆஜராக 12.11.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு 1வது எதிர்மனுதாரராகிய தாங்கள் ஆஜராகும்படியும், ஆஜராக தவறும்பட்சத்தில் தங்களை பொறுத்து, ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
S.A.வின்சர் எம்.ஏ.,பி.எல்.,
அட்வகேட்,
ஹைகிரவுண்ட்ஸ்,
திருநெல்வேலி-11.

IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE NO. 1, SALEM.
(மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாயம்)
M.C.O.P. No. 383 / 2025
வினோத்குமார் ..... மனுதாரர்
இடையே
முருகேசன் (இன்சூரர்), எண். 209, காமராஜ் நகர், வேலப்பநாதனூர், சேர்ந்தமங்கலம், சங்கரன்கோவில், திருநெல்வேலி - 627 587.
..... 4 ஆம் எதிர்மனுதாரர்
4 ஆம் எதிர்மனுதாருக்கு அறிவிப்பு
மேற்படி மனுதாரர், மேற்படி நீதிமன்றத்தின் உத்திரவு படி மேற்படி 4 ஆம் எதிர்மனுதாரர் மீது இழப்பீடு கோரி MCOP எண். 383/2025 என்ற எண்ணில் கனம் சிறப்பு சார்பு முதலாவது நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 4 ஆம் எதிர்மனுதாரர் ஆஜராவதற்காக மேற்படி நீதிமன்றத்தில் வருகின்ற 07-11-2025 ஆம் தேதி அன்று காலை 10 மணிக்கு சமூகம் கோர்ட்டில் நேரிலோ (அ) வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி உங்களது ஆட்சேபனைகளை தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஆட்சேபனை இல்லை என்று கருதி ஒருதலைப்பட்சமாக முடிவு செய்யப்படும் என்பதை அறியவும்.
// கோர்ட்டார் உத்தரவுபடி //
R. ரமேஷ், B.A., B.L.,
வழக்கறிஞர், சேலம்.

கனம் சார் ஆட்சியர் நீதிமன்றம்
கோவில்பட்டி
முருகதாஸ்,
த/பெ. தங்கராஜ்,
க எண் 69/2, கிழக்குத் தெரு,
துறையூர் கிராமம், கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.
மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், கோவில்பட்டி.
சார் பதிவாளர், எட்டையாபுரம்.
எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு
எனது தகப்பனார் தங்கராஜ், த/பெ. பேச்சி முத்து, என்பவர் கடந்த 19.03.1979. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி சார் ஆட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
இப்படிக்கு
முருகதாஸ்,
மனுதார்,

கனம் சார் ஆட்சியர் நீதிமன்றம்
கோவில்பட்டி
கருப்பாயி,
க/பெ. மாடசாமி ,
க எண் 35/1, பிள்ளையார் கோவில் தெரு, கயத்தார் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், கயத்தார்.
சார் பதிவாளர், கயத்தார்.
எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு
எனது தாயார் அமராவதி, க/பெ. அய்யாச்சாமித் தேவர் என்பவர் கடந்த 05.06.1993. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி சார் ஆட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
இப்படிக்கு
கருப்பாயி,
மனுதார்,

